முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

**O.S.No.76-2023**

**Witness PW 2**

இன்று ( 13/03/2024 ) வீரப்பன் த/பெ மகாப்பூ சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

வாதி அழைத்ததின் பேரில் தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வாக்குமூலம் வாதி கார்த்திகேயனின் வழக்கறிஞர் தயார் செய்ததில் நான் கையெழுத்து மட்டும் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் விவசாயம் செய்கிறேன். எனக்கு எத்தனை ஏக்கர் நிலம் உள்ளது என்றால் நிலம் இல்லை. நான் சென்னையில் என்னவேலை பார்க்கிறேன் என்றால் வாட்ச்மேன் வேலை பார்க்கிறேன். வாதி கார்த்திகேயன் சென்னை பேருந்தில் அரசு ஓட்டுனராக பணிபுரிகிறார் என்றால் அது எனக்கு தெரியாது. கார்த்திகேயன் எனது சொந்த அத்தை மகன் என்றால் இல்லை. நான் மாமா என்று பொதுவாக அழைப்பேன். எனது அம்மாவும் கார்த்திகேயன் தந்தையும் உடன் பிறந்தவர்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதி அவரது மகள் திருமணத்திற்கு அழைப்பிதழ் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். நான் திருமணத்திற்கு போனேனா என்றால் போகவில்லை. எனது குடும்பத்தில் யாராவது திருமணத்திற்கு சென்றார்களா என்றால் நான் வெளியூரில் வேலைக்கு சென்றிருந்ததால் யார் போனார்கள் என்று தெரியாது. எந்த தேதியில் திருமணம் நடந்தது என்றால் தெரியாது. நான் பாண்டு எழுதியதை பார்த்துள்ளேன். தாவா பிராமிசரி நோட்டில் சாட்சிகள் 1,2 என்று குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் என்ன எழுதப்பட்டுள்ளது என்றால் வீரப்பன் என்று எழுதப்பட்டுள்ளது. பிராமிசரி நோட்டில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் எனக்கு படிக்கத்தெரியாது ஆனால் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. பிராமிசரி நோட்டை எழுதியவர் கையெழுத்திடவில்லை என்றால் எழுதினார்கள் கையெழுத்து போட்டார்களா என்றால் எனக்கு தெரியாது. அமிர்தாசலம் என்ற சாட்சி வாதியின் தங்கையின் கணவர் என்றால் தெரியாது. பிரமாண வாக்குமூலத்தில் என்ன எழுதியுள்ளது என்றால் எனக்கு படிக்கத்தெரியாது அதனால் என்ன உள்ளது என்று எனக்கு தெரியாது. பிராமிசரி நோட்டு எந்த கிழமையில் எழுதப்பட்டுள்ளது என்றால் தெரியாது தேதி தெரியும். நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல் பிரதிவாதி அவரது மகள் திருமணத்திற்காக ரூ.1லட்சம் கடன் எதுவும் வாதியிடம் வாங்கவில்லை என்றாலும் பிரதிவாதி கடன் வாங்கியது போல் வாதி மற்றும் சாட்சிகளோடு சேர்ந்து பொய்யாக தயாரிக்கப்பட்ட ஆவணம் அதற்கான நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு தமிழ் எழுத படிக்கத்தெரியுமா என்றால்

தெரியாது. கையெழுத்து மட்டும் போடுவேன். நான் என்னுடைய முதன்மை சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் வாதியின் தங்கை கணவர் அமிர்தாசலம் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை. என்னுடைய முன்னிலையில் கடன் எதுவும் பெறவில்லை, மோசடியாக தயாரிக்கப்பட்ட பிராமிசரி நோட்டிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

I Additional Subordinate Judge,
Villupuram

முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

**O.S.No.76-2023**

**Witness PW 3**

இன்று (13/03/2024) அமிர்தாசலம் த/பெ வீரப்பன் சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

நான் வாதி கார்த்திகேயனின் தங்கையின் கணவர் என்றால் சரிதான். வாசா2 வீரப்பன் என்பவரின் தாயார் வாதி கார்த்திகேயனின் தந்தையார் உடன் பிறந்த சகோதரி என்றால் சரிதான். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் காகுப்பம் நியாய விலை கடையில் விற்பனையாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் டிப்ளமோ மெக்கானிக்கல் இன்ஜினியரிங் படித்துள்ளேன். பிராமிசரி நோட்டில் சாட்சிகள் 1, 2 என்று எழுதப்பட்ட இடத்தில் 2 என்ற இடத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்றால் எனது பெயர் எழுதப்பட்டுள்ளது. பிராமிசரி நோட்டில் ஸ்டாம்ப் மீது எழுதப்பட்டுள்ள கையொப்பம் மீண்டும் மீண்டும் எழுதப்பட்டு பட்டையடித்துள்ளது என்றால் சரிதான். ஸ்டாம்ப் மீது உள்ள கையொப்பமும் அதற்கு கீழுள்ள கையொப்பமும் வித்தியாசம் உள்ளது என்றால் இல்லை. பிரதிவாதி மகள் திருமணத்திற்கு திருமண பத்திரிக்கை கொடுத்தாரா என்றால் வீட்டில் வாங்கியிருப்பார்கள் நான் வாங்கவில்லை திருமண நிகழ்ச்சிக்கு யாராவது போனீர்களா என்றால் போகவில்லை. திருமணம் எந்த தேதியில் நடந்தது என்றால் தெரியாது. பிராமிசரி நோட்டில் எழுதியவர் கையெழுத்திட்டுள்ளாரா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய பிரமாண பத்தரிக்கையில் வாதியின் வழக்கறிஞர் சொல்லி தயார் செய்யப்பட்ட ஆவணத்தில் தான் கையெழுத்துட்டுள்ளேன் என்றால் சரிதான். வாதிக்கும் எனக்கும் கருத்து வேறுபாடு காரணமாக பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். எவ்வளவு காலமாக கருத்து வேறுபாடு ஒரு வருட காலமாக பேச்சு வார்த்தையில்லை. வாதி அழைத்ததின் பேரில் தான் பிராமிசரி நோட்டில் சாட்சியாக இருக்கப்போனேன் என்றால் சரிதான். சுடரொளி என்பவர் வாதியின் மனைவி என்றால் சரி. வாதி மற்றும் சாட்சிகள் அனைவரும் ஒன்றாக இணைந்து பிரதிவாதியின் கையெழுத்தை போலியாக பிராமிசரி நோட்டில் போட்டு பிரதிவாதியின் மீது இந்த வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. கையெழுத்து போடவேண்டிய இடத்தில் நான் கையெழுத்து போடவில்லை என்றால் சரியல்ல. பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**குறுக்கு விசாரணையில் ஸ்டாம்ப் மீது கையெழுத்து திரும்ப திரும்ப போடப்பட்டு பட்டையாக உள்ளது என்று சாட்சி ஒப்புக்கொண்டுள்ளார் அதில் விளக்கம்கோரி மறுவிசாரணை அனுமதி கோரி வழங்கப்பட்டது.**

ஸ்டாம்ப் மீது கையெழுத்து யார் பட்டையாக போட்டது என்றால்

கோவிந்தன் தான் போட்டார்.

**<u>மறுகுறுக்கு விசாரணை</u>**

பிராமிசரி நோட்டில் உள்ள கையெழுத்தினையும் பிரதிவாதியின் ஒப்புக்கொள்ளப்பட்ட கையெழுத்தினையும் கையெழுத்து நிபுணரிடம் அனுப்பி ஒப்பிட்டு பார்த்தால் உண்மை தெரியவரும் என்றால் சரிதான்.

முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

**O.S.No.76-2023**

## Witness PW 4

இன்று (13/03/2024) சுடரொளி க/பெ கார்த்திகேயன் சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய பிரமாண பத்திரிக்கை எனது கணவரின் வழக்கறிஞர் தயார் செய்ததில் நான் கையெழுத்திட்டுவிட்டு நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரிதான். எனது கணவர் சென்னை பஸ்ஸில் அரசு ஓட்டுனராக பணிபுரிகிறார் என்றால் சரிதான். சுமார் 14 வருடம் பணிபுரிந்து வருகிறார் என்றால் 12 வருடங்களாக பணிபுரிந்து வருகிறார். நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.காம் படித்துள்ளேன். பிரதிவாதி எங்கள் குடும்பத்தில் ஏற்கனவே கடன் வாங்கியுள்ளாரா என்றால் இல்லை. என்ன கிழமையில் பிராமிசரி நோட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் திங்கட்கிழமை. வாதி எனது கணவர் என்றால் சரிதான். வீரப்பன் எனது கணவரின் அத்தை மகன் என்றால் சரியல்ல. அமிர்தாசலம் என்ன உறவு என்றால் எனது கணவரின் தங்கை கணவர். ஸ்டாம்ப் மீதுள்ள கையெழுத்து மற்றும் அதன் கீழுள்ள கையெழுத்து வித்தியாசம் உள்ளது என்றால் பிரதிவாதிதான் கையெழுத்திட்டார். பிரமாண பத்திரிக்கையில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். பிராமிசரி நோட்டில் நான் கையெழுத்திட்டுள்ளேனா என்றால் நான் கையெழுத்து போடவில்லை. பிராமிசரி நோட்டு நான் பூர்த்தி செய்யவில்லை என்றால் சரியல்ல. உண்மையில் பிரதிவாதி கடன் பெற்றிருந்தால் வெளி நபரிடம் கொடுத்த உரிய சாட்சிகளின் முன்னிலையில் கையெழுத்து பெற்றிருப்போம் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி கையெழுத்தை எங்கள் குடும்பத்தில் நாங்களே போட்டு அவர் மீது பொய்யாக வழக்கு தொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் மகளுக்கு என்ன தேதியில் திருமணம் நடந்தது என்றால் கடன் பெற்ற ஒரு வாரத்திற்கு பிறகு நடந்தது தேதி ஞாபகமில்லை. பிராமிசரி நோட்டு தேதிக்கு முன்பாகவே அதாவது 23/05/2021 தேதியில் பிரதிவாதியின் மகளுக்கு திருமணம் நடைபெற்றுவிட்டது அதனால் திருமணத்திற்கு கடன் வாங்கவேண்டிய அவசியமில்லை என்று சொன்னால் சரியல்ல.

வாதி வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**.